# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 227/மா/2018**

**நாள் : 08/11/2018**

**திரு ரா. சுப்பிரமணி,**
**திண்டுக்கல்.** – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல். – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டி அம்மன் கோயில் வடக்குத் தெரு, 198/65 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் ஓய்வு பெற்ற மாநகராட்சி துப்புரவுப் பணியாளர் திரு ரா. சுப்பிரமணி அவர்களின் 01.11.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.11.2018 அன்று பெறப்பட்டு, 227/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## <u>ஆணை</u>

திண்டுக்கல் மாநகராட்சி, செல்லாண்டி அம்மன் கோயில் வடக்குத் தெரு, 198/65 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் ஓய்வு பெற்ற மாநகராட்சி துப்புரவுப் பணியாளர் திரு ரா. சுப்பிரமணி என்பவர் தான் 30.06.2015 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றதாகவும், 05.04.2017 நாளிட்ட திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை எண்.019538/2015/பி2–இல் ஒப்பளிக்கப்பட்ட ஓய்வூதியப் பலன்கள் தமக்கு வழங்கப்படவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்ற துப்புரவுப் பணியாளர். 2016 மற்றும் 2017–ஆம் ஆண்டுகளில் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கப் பட்டுள்ள நிலையில், தனக்கு வழங்கப் படாதது குறித்து முறையீடு செய்துள்ளார். ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்குவதற்குப் பின்பற்றப்படும் நடைமுறைகளில்

எந்தவித பாரபட்சமும் காட்டாமல், நடைமுறைகளின்படி மனுதாருக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்குவதற்குப் பரிசீலிக்கும்படி திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-- ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 8—ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

22.11.18

23/11/18

பெறுநர்

1. திரு. ரா. சுப்பிரமணி,
   198/65, செல்லாண்டி அம்மன் கோயில் வடக்குத் தெரு,
   திண்டுக்கல்.

2. மாநகராட்சி ஆணையர்,
   திண்டுக்கல் மாநகராட்சி,
   திண்டுக்கல்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்